மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) குறிப்பிட்ட புகார் ஏதும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. மெ. ராஜு : தலைவரவர்களே, இதுபோன்ற ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பஞ்சாயத்தினுடைய தீர்மானம் இல்லாமல் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இதுபோன்று என்று சொல்கிறார். அவர் குறிப்பிட்டிருக்கிற அந்தப் புகாரேகூட அரசுக்கு வரவில்லை.

நெய்வேலியில் கிடைக்கும் தண்ணீரில் ரசாயனக் கலவை.

*வினா எண் 32—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெய்வேலி நகரத்தில் கிடைக்கும் தண்ணீரில் சிலிக்கா (Slica) என்னும் ரசாயன வஸ்து இருப்பதால் அந்தத் தண்ணீரை குடிப்பவர்களுக்கு வயிற்று வலி நோய் வருவது உண்மையா ?

(ஆ) அதை அகற்றி தண்ணீரை சுத்தப்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலியில் கிடைக்கக்கூடிய தண்ணீரில் சிலிக்கா என்ற இரசாயனப் பொருள் இருப்பதனால் வயிற்று வலி தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பது அனுபவிக்கப்பட்டு அந்தத் தண்ணீர் பரிசோதனைக்கு கிண்டிக்கு அனுப்பப்பட்டு, 'அந்த சிலிக்கா இருக்கிறது என்பது உண்மைதான், ஆனால் அதனால் வயிற்று வலி வரவில்லை', என்று அவர்களிடமிருந்து அறிக்கை

[1979 அக்டோபர் 29]

வந்திருக்கிறது. அமைச்சரவர்கள், அப்படி இல்லவே இல்லை, அப்படிப்பட்ட நிலைமையே இல்லை என்று கூறுவது விசித்திர மாக இருக்கிறது. அப்படிப்பட்ட கண்டு பிடிப்பு வந்த பிறகு கூட தொடர்ந்து வயிற்று வலி இருக்கிறது. அந்தப் பகுதியில் சுமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். 17,000 தொழிலாளர் களும், அவர்கள் குடும்பங்களும், வியாபாரிகளும் அங்கு இருக் கிறார்கள். அவர்களில் ஏராளமான பேர் வயிற்று வலியினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அதன்மீது உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே சொன்னதுதான் சரி. அது பாதிக்காது என்று முடிவு செய்து விட்டார்கள்.

## காளப்பநாயக்கன்பட்டிக்குக் குடிநீர் வசதி.

*வினா எண் 33—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் காளப்பநாயக்கன்பட்டிக்குக் குடி நீர் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) அத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ? அது எப் பொழுது எடுத்துக்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனை யில் உள்ளது. நடைபெற்றுவரும் கள ஆய்வுப்பணிகள் முடிந்த பிறகே திட்டம் செயல்படுத்தக்கூடியதா என்ற முடிவு தெரியும்.

## பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகள்.

*வினா எண் 34—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்து விரைவு வண்டியிலும், மற்றும் நீண்ட தூரம் செல்லும் வண்டிகளிலும் லக்கேஜ்-கேரியர் அவசியம் இருக்கவேண்டும் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் என்றால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?